**B 1017** **UTA1**

B.Ed. DEGREE EXAMINATION, DECEMBER 2011

(For the candidates admitted from the academic year 2009–2010 onwards)

Optional Course : TAMIL — Paper I

Time : 3 hours Maximum marks : 80

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் அரைப்பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 2 மதிப்பெண்கள்.

1. தாய்மொழியின் இன்றியமையாமை யாது?

2. செயல்திட்ட முறையின் படிநிலைகள் பற்றி எழுதுக.

3. திட்டமிட்டு கற்றல் என்றால் என்ன? அதன் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

4. நுண்ணிலைக் கற்பித்தலின் இன்றியமையாமை யாது?

5. செய்யுட் பகுதியில், அருட்பாடல்கள் கற்பித்தலின் போது சிறப்பு நோக்கங்களாக எவற்றைக் கொள்வாய்?

6. உரைநடைப் பாடம் கற்பித்தல் வழி சொற்களஞ்சியம் பெருக்குவதற்கு இரு சான்றுகள் தருக.

7. கட்டுரை எழுதுவதன் படிப்படியான மூன்று வளர்ச்சி நிலைகள் யாவை?

8. கேட்டல் - வரையறு.

9. விளையாட்டு முறையில் இலக்கணம் கற்பித்தலுக்கு ஒரு சான்று தருக.

10. சொற்பொழிவிற்கும்,சொற்போருக்கும் உள்ள வேறுபாடு யாது?

11. சொல்வதை எழுதுதல் என்றால் என்ன?

12. நிறுத்தற் குறியீட்டின் இன்றியமையாமையைச் சான்றுடன் எழுதுக.

பகுதி ஆ — ($6 \times 5 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 5 மதிப்பெண்கள்.

13. மேற்பார்வை படிப்பு நிகழும் போது ஆசிரியர் மேற்கொள்ளத்தக்கன யாவை?

14. பாடக்குறிப்பு தயாரித்தலின் நன்மை, தீமைகளைக் குறிப்பிடுக.

15. செய்யுட்களை மனப்பாடம் செய்வதால் விளையும் நன்மைகள் யாவை?

16. மாணவர்கள் இலக்கணப் பாடத்தை வெறுப்பதற்குரிய காரணங்கள் யாவை?

17. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளை விளக்குக.

18. திருந்திய பேச்சினை வளர்க்கத் துணையாகும் பயிற்சிகள் யாவை?

19. எழுதும் போது நேரும் பிழைகளையும், அவற்றைக் களையும் வழிமுறைகளையும் எழுதுக.

20. நல்ல தேர்வின் நற்பண்புகள் யாவை?

பகுதி இ — ($2 \times 15 = 30$ மதிப்பெண்கள்)

இரண்டு கட்டுரை வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) படிக்கக் கற்பித்தலின் நோக்கங்களை வரையறுத்து, தொடக்க நிலையில் படிக்கக் கற்பிக்கும் முறைகளையும் அவற்றின் நிறை குறைகளையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிக் கற்பித்தலின் நுட்பக் கூறுகள் பற்றிக் கட்டுரை வரைக.

22. (அ) சிறந்த பாடநூலைத் தயாரிக்கும் பொழுது மனதிற் கொள்ளத்தக்க செய்திகள் யாவை? நல்ல பாடநூலின் அமைந்திருக்க வேண்டிய பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிப்பாடம் ஒரு திறன் பாடம் என்ற கூற்றை நிறுவுக.

———————